அருப்புக்கோட்டையில்

# ரூ.154.98 கோடியில் புறவழிச்சாலை பணிகள்: கலெக்டர் சுக்புத்ரா ஆய்வு



**விருதுநகர், ஜூலை 21-**

அருப்புக்கோட்டையில் ரூ.154.98 கோடி மதிப்பில் அருப்புக்கோட்டை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட கலெக்டர் சுக்புத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது: அருப்புக்கோட்டை நகருக்கு மேற்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் மற்றும் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு ரூ.119.58 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளில் 22 பெட்டிப்பாலங்களும், 10 சிறுபாலங்களும், 3 சாலை சந்திப்புகளையும், மேலும் 1 இரயில்வே மேம்பாலம் மானாமதுரை - விருதுநகர் இரயில்வே வழித்தடத்தின் குறுக்கிலும் உள்ளடக்கியுள்ளது.

சாலை பணிகளில் மொத்தமுள்ள 9.905 கி.மீ - தூரத்தில் 7.98 கி.மீ சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும், அருப்புக்கோட்டை புறவழிச்சாலை அமைப்பதற்கு நில எடுப்பு பணிக்கு மட்டும் ரூ.35.40 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலுள்ள மற்றும் குறுகலான, வாகன நெரிசல் உள்ள அருப்புக்கோட்டை நகர பகுதியினை தவிர்த்து சிரமமின்றி பயணிக்க ஏதுவாக இப்புறவழிச்சாலை அமையும் என தெரிவித்தார் அதனை தொடர்ந்து, அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு, பதிவேடுகள், கோப்புகள், பெறப்பட்டுள்ள மனுக்கள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள மனுக்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டு தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள், வட்டாட்சியர் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆண்டாள் கோவில் கொடியேற்றத்தில் பட்டர்கள், பரிசாரகர்கள் இடையே வாக்குவாதம்



**ஸ்ரீவில்லிபுத்தூர்,ஜூலை 21-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் ஆடிப்பூர தேரோட்ட திருவிழா கொடியேற்றத்தின் போது, பட்டர்கள் மற்றும் பரிசாரகர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு மோதலாக மாறியது.

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான ஶ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் பிரசித்தி பெற்ற ஆடிப்பூர தேரோட்டத் திருவிழா கொடியேற்றம் நேற்று காலை நடைபெற்றது. பரத்வாஜ் பட்டர் பூஜைகள் செய்து கொடியேற்றினார். கொடியேற்றிய பின் கொடி மரத்தில் தர்ப்பை புல் கட்டுவதற்காக பத்ரி நாராயண பட்டர் கொடிமரத்தின் மீது ஏறினார். அப்போது ஸ்தானிகம் ரமேஷ் மகன் பிரசன்னா கொடிமரத்தில் ஏறியதற்கு, பட்டர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் வாக்குவாதம் ஏற்பட்டது.

கொடி மரத்தின் மேல் நின்ற பிரசன்னாவை பிடித்து பட்டர்கள் கீழே இழுத்தனர். இதனால் பட்டாச்சாரியார்கள் மற்றும் பரிசாரகர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு மோதலாக மாறும் சூழல் உருவானது. பட்டாச்சார்யர்கள் தான் அலங்காரம் மற்றும் பூஜைகள் செய்ய வேண்டும், பரிசாரகர்கள் பூஜைகளுக்கு தேவையான உதவிகள் தான் செய்ய வேண்டும் என பட்டர்கள் கூறினர்.

அதன்பின் கொடியற்றிய பரத்வாஜ் பட்டரின் தந்தை வாசுதேவ பட்டர் கொடி மரத்தில் ஏறி தர்ப்பை புல் கட்டினார். அப்போது மணியம் அம்பி மகன் கிரி கொடி மரத்தில் ஏறியதற்கு வாசுதேவ பட்டரும், பட்டாச்சார்யார்களும் எதிர்ப்பு தெரிவித்ததால், செயல் அலுவலர் சர்க்கரையம்மாள் கீழே இறங்க கூறியதை அடுத்து கிரி கீழே இறங்கினார். தொடர்ந்து இரு தரப்பும் செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர் குழுவில் புகார் அளித்தனர்.

# வேலூர் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் இந்திய பாரம்பரியமிக்க நகைகளின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்



**வேலூர், ஜூலை 21-**

இந்திய பாரம்பரியமிக்க நகைகளின் கண்காட்சி தற்போது மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வேலூர் ஷோரூமில் நடைபெற்று வருகிறது. தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன. இந்த கண்காட்சியை திவ்யபாரதி, டாக்டர் ரேகா, செல்வி.சௌமியா ஆகியோர் தொடங்கி வைத்தனர். இவர்களுடன் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் வேலூர்கிளை தலைவர் முகமது சச்சின், மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் வேலூர் கிளை துணை இயக்குனர் அனந்தன் வி.குமார், மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் வேலூர் கிளை விற்பனை மேலாளர் நித்தின், மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர். கலைநயமிக்க இந்த கண்காட்சி கலைகளில் ஆர்வமுள்ளவர்களின் கண்களுக்கு விருந்தாக அமையும். இந்த கண்காட்சி ஜூலை-19-2025 ஆம் தேதி முதல் ஜூலை-27-2025 ஆம் தேதி வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான மைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார்லெட் ஆகியவை இந்தகண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.இதைத் தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 13 நாடுகளில் 400-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், ராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி,தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை,புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர், செங்கல்பட்டு,கடலூர் ஆகிய நகரங்களில் 31 கிளைகளை கொண்டுள்ளது.

அருப்புக்கோட்டையில்

# காமராஜர் பிறந்தநாள் ரத்ததான முகாம்



**அருப்புக்கோட்டை, ஜூலை 21-**

பெருந்தலைவர் காமராஜரின் 123 வது பிறந்த நாளை முன்னிட்டு அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின்முறை மற்றும் அருப்புக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனை இணைந்து ரத்ததான முகாம் எஸ்.பி.கே. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின்முறை தலைவர் சுதாகர் தலைமையில் எஸ். பி. கே .ஆண்கள் மேல்நிலைப் பள்ளி செயலர் காசி முருகன் முகாமை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அரசு மருத்துவமனை மருத்துவர் அண்ணாதுரை தலைமையில் மருத்துவ குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களிடம் ரத்ததானத்தை சேகரித்தனர்.

நிகழ்ச்சியில் நாடார்கள் உறவின்முறை செயலர் சரவணன், உதவி செயலர் பாலசுப்ரமணியன், பொருளாளர் கனகராஜ் , மற்றும் எஸ்.பி.கே. கல்லூரி செயலர் சங்கர சேகரன், எஸ். பி.கே. பெண்கள் மேல்நிலைப்பள்ளி செயலர் ராம்குமார், எஸ்.பி.கே. துவக்கப்பள்ளி செயலர் சௌந்தர பாண்டியன், எஸ்.பி.கே. ஜூனியர் பள்ளி செயலாளர் ராஜேஷ், மற்றும் உறவின் முறை நிர்வாகிகள் பெரியோர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக எஸ்.பி.கே. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைவர் ஜெய் கணேசன் நன்றியுரை வழங்கினார்.

# லெக்கயன்கோட்டையில் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை

**ஒட்டன்சத்திரம், ஜூலை 21-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்திற்குட்பட்ட லெக்கையங்ன்கோட்டை ஊராட்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் மண், மொழி, மானம் காக்க, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி சண்முகம், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்லம்மாள் தண்டபாணி ஊராட்சி நிர்வாகிகள் அப்துல்லா, நாகூர், முத்துமாணிக்கம், மங்கையர்கரசி, வாக்கு சவடி முகவர் ஆனந்தகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து உடன் இருந்தனர்.

# அதிநவீன 4கே கேமரா, பல்பணி திறனுடன் ஐக்யூஓஓ இசட்10ஆர் ஸ்மார்ட்போன் ஜூலை 24-ல் வெளிவருகிறது

**சென்னை, ஜூலை 21-**

உயர் செயல்திறன் கொண்ட ஸ்மார்ட்போன்கள் தயாரிப்பில் முன்னணி பிராண்டாக திகழும் ஐக்யூஓஓ நிறுவனம், தனது புதிய இசட்10ஆர் ஸ்மார்ட்போனை வரும் 24-ந்தேதி அறிமுகம் செய்கிறது. மாணவர்கள் மற்றும் சமூக வலைதள பயனர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த ஸ்மார்ட்போனில், 4கே முன் மற்றும் பின்புற கேமரா, அல்ட்ரா-ஸ்லிம் குவாட்-வளைந்த டிஸ்பிளே மற்றும் இந்தப் பிரிவில் முன்னணியில் இருக்கும் மீடியாடெக் டைமன்சிட்டி 7400 புராசசர் உடன் வெளிவருகிறது. இது பயனர்களின் பயணத்தின்போது மகிழ்ச்சியான மற்றும் மன நிம்மதியான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. உள்ளடக்கத்தை உருவாக்குதல், பாடம் தொடர்பான வகுப்புகளில் கலந்துகொள்வது, ரீல்களில் ஸ்க்ரோலிங் செய்தல், கேமிங் அல்லது பல்வேறு செயலி பயன்பாடுகள் என எதுவாக இருந்தாலும், இந்த ஸ்மார்ட்போன் வேகமான, பல்பணி வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதில் 50எம்பி சோனி ஐஎம்எக்ஸ் 882 ஓஐஎஸ் பிரதான கேமரா, 32எம்பி 4கே முன் கேமரா என அதிநவீன கேமரா வைக் கொண்டுள்ளது. முன் மற்றும் பின்புற கேமராக்களில் 4கே வீடியோ பதிவு மூலம், பயனர்கள் தாங்கள் விரும்பும் வீடியோக்களை மிகத் தெளிவான, எச்டிஆர்-தரத்தில் படம் பிடிக்க முடியும். இந்த விலைப்பிரிவில் 4கே 32 எம்பி முன்புற கேமராவுடன் ஐக்யூஓஓ அறிமுகம் செய்யும் முதல் ஸ்மார்ட்போன் இதுவாகும்.நீண்ட நேர பயன்பாட்டிற்கு ஏற்ற 5700 எம்ஏஎச் பேட்டரியுடன், தொடர்ச்சியாக வீடியோக்களை படமாக்குதல், விரிவுரைகளுக்கு இடையில் கேம் விளையாடுதல் அல்லது வகுப்புகளுக்கு இடையில் உள்ளடக்கங்களை உருவாக்குதல் என அனைத்திற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.மீடியாடெக் டைமன்சிட்டி 7400 5ஜி புராசசர், டிஎஸ்எம்சி 4என்எம் சிப்செட் ஆகிய நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது.

# கோயம்புத்தூரில் ஏஓஐ, புரோஸ்டேட் புற்றுநோய்க்கு உயர் துல்லிய கதிரியக்க சிகிச்சை வழங்கியது

**கோவை, ஜூலை 21-**

அமெரிக்கன் ஆன்காலஜி இன்ஸ்டிடியூட் (ஏஓஐ), கோயம்புத்தூரில், புரோஸ்டேட் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 74 வயது ஆண் நோயாளிக்கு, நவீன ஸ்டீரியோடாக்டிக் பாடி ரேடியேஷன் தெரபி முறையில் வெற்றிகரமான சிகிச்சையை வழங்கியது. இந்த சிகிச்சை, உலகத் தரம் வாய்ந்த வேரியன் ட்ரூபீம் எஸ்டிஎக்ஸ் லீனியர் ஆக்சலரேட்டர் கருவியின் உதவியுடன், மிகத் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் நோயாளிக்கு சிறுநீர்விடும் அவசரம் மற்றும் எரிச்சல் போன்ற அறிகுறிகள் இருந்ததால், பிஎஸ்எம் ஏ பெட்ஸ்கேன் மற்றும் எம்ஆர்ஐ மூலம் கட்டி கண்டறியப்பட்டது. பலதரப்பட்ட கட்டி பலகை மதிப்பீட்டின் பின், நியோஅட்ஜுவன்ட் ஹார்மோன் சிகிச்சை வழங்கப்பட்டு, தொடர்ந்து எஸ்பிஆர்டி சிகிச்சை ஒரு வாரத்தில் 5 அமர்வுகளாக அளிக்கப்பட்டது.எஸ்பிஆர்டி என்பது மிகக் குறுகிய காலத்தில், அதிக துல்லியத்துடன் அதிக கதிர்வீச்சு அளவைக் கொடுத்து புற்றுநோய் கட்டியை அடக்கக்கூடிய சிகிச்சை முறையாகும்.

இது குறித்து ஏஓஐ கோயம்புத்தூரின் கதிர்வீச்சு புற்றுநோய் நிபுணர் டாக்டர் கண்ணன் மகாராஜன் கூறுகையில், எஸ்பிஆர்டி போன்ற நவீன கதிர்வீச்சு முறைகள், குறைந்த பக்க விளைவுகளுடன் மிகச் சிக்கனமான மற்றும் பயனுள்ள சிகிச்சையை வழங்க உதவுகின்றன.

இது புற்றுநோய் கட்டியை கட்டுப்படுத்துவதில் ஒரு முக்கிய முன்னேற்றமாகும்.இந்த வெற்றிகரமான சிகிச்சை, ஏஓஐ-யின் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் பல்துறை மருத்துவ அணுகுமுறையின் திறனை சுட்டிக்காட்டுகிறது. ஏஓஐ, கோயம்புத்தூரில் உலக தரமுடைய புற்றுநோய் சிகிச்சை மையமாக உருவெடுத்து, பல நோயாளிகளுக்கு நம்பிக்கையை அளிக்கிறது என்று கூறினார்.

வடக்கு 2- ம் பகுதி அ.தி.மு.க. செயலாளர் வி.கணேசன் தலைமையில் கூட்டம்:

# அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மதுரையில் மட்டும் 10 மேம்பாலங்களை கட்டினோம்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பெருமிதம்



**மதுரை, ஜூலை 21-**

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மதுரையில் பத்து மேம்பாலங்களை கட்டினோம் என்று வடக்கு 2- ம் பகுதி அ.தி.மு.க. செயலாளர் வி.கணேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேசினார்.

மதுரை மாநகர் மாவட்டம் மத்திய 2-ம் பகுதி 58 வது வடக்கு வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் மணிகண்டன் தலைமையில் பகுதி பொறுப்பாளர் அஸ்வின் குமார் முன்னிலையில் மேலபொன்னகரம் ஆறாவது தெருவில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா,பா. குமார், சக்தி மோகன், எம்.எஸ்.கே.மல்லன்,சக்தி விநாயகர் பாண்டியன், ஆர்.கே. ரமேஷ், பேராசிரியர் ஜெயபால், ஒட்டரணி திருமுருகன், வி.பி. ஆர்.செல்வகுமார்,மார்க்கெட் செந்தில் குமார், தளபதி மாரியப்பன், எம்.ஏ.நாசர், திடீர் நகர் பாலா, கார்ஜ்ன பால்கரன், எம்.ஏ.பாண்டி, பாண்டியம்மாள், கணேஷ்பாபு, கணேசன், பாரதிராஜா, வக்கில் ஜெயபாண்டி, சண்முகநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர் மாவட்டம் வடக்கு 2-ம்பகுதி 26 வது வார்டு அ.தி.மு.க. சார்பில் வடக்கு வட்டச் செயலாளர் பால்பாண்டி தலைமையில் பகுதி கழகச் செயலாளர் வி. கணேசன் முன்னிலையில் நரிமேடு சரவணா மருத்துவமனை அருகில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம். எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், ஜெயவேல், இஷிகாநாச்சியார், பேராசிரியர் ஜெயபால்,வி.பி.ஆர். செல்வகுமார், ஆர்.பாஸ்கரன், சுகந்தி அசோக், விநாயகர் மூர்த்தி, பீ.பீ.குளம் மகேந்திரன், எஸ்ஜெ கண்ணன், பாண்டித்துரை, எம்.சிவா, எஸ்.முருகன், முத்துக்குமார், ராஜகோபால், எஸ்.ரவி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் மதுரை மாநகர மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசியதாவது-

எப்படிப்பட்ட அரசாங்கம் பாருங்க ஒரு சாதாரண மாற்றுத்திறனாளி முதலமைச்சர் ஏமாற்றிவிட்டார். முதல்வரை பார்ப்பதற்கு கோட்டைக்கு போனால் போக முடியாது யாரு என்னனு விவரம் கேட்பாங்க. ஒரு மாற்றுத்திறனாளி அது ராமநாதபுரத்துக்காரன் போய் ஏமாற்றிவிட்டார். அந்த அளவுக்கு மோசமான நிர்வாகம் இன்னைக்கு எங்கு பார்த்தாலும் போதை கலாச்சாரம், எங்க பாத்தாலும் கஞ்சா விதவிதமான போதைகள் மாணவிகள் போதை அடிக்கிறாங்க.நேற்றைக்கு முன்தினம் பாத்தீங்களா திருநெல்வேலி நாலு பசங்க தள்ளாடிக்கிட்டு இருக்காங்க என்னடா ன்னு கேட்ட வாத்தியாரை போய் பீர் பாட்டில் எடுத்து மண்டைய உடைச்சுடாங்க. இப்போ உறுப்பினர் சேர்க்கிறார்கள் திமுகவினர். ஆதார் கார்டு வாங்குறாங்க உங்களுடைய ஸ்மார்ட் கார்டு உங்களுடைய பேங்க் அக்கவுண்ட் இல்லையா உங்களுடைய ஐடி பாஸ்வோர்ட் எது இருந்தாலும் கேட்கிறார்கள். மக்கள் யாரும் அவர்களை நம்பி கொடுத்துவிடாதீர்கள். தி.மு.க.விற்கு தேர்தல் தோல்வி பயம் வந்துவிட்டது. 2014-, 16-ல் யாரை நம்பி அம்மா தனித்து நின்றாங்க தமிழ்நாட்டு மக்களை நம்பித்தான் நின்றாங்க. நீ எங்க திமுக தனியாக நிக்க.கம்யூனிஸ்ட் காரர்கள் சேரசம் போயிட்டாங்க கட்சி அடமானம் வைத்து தான் கூட்டணி சொல்லிட்டு அந்த போர்குணமே இல்ல மக்களுக்கு ஒரு பாதிப்பு வருதா போராட்டம் பண்ணுது கம்யூனிஸ்ட் தான் இன்னைக்கு மக்களை எனக்கு நடுத்தெருவுல விட்டுடு கம்யூனிஸ்ட் இன்னைக்கு கை ஏந்தி நிற்கிறது. இந்த நாட்டில் கள்ளச்சாராயத்துல 100 பேர் செத்து போயிட்டாங்க. கள்ளச்சாராயத்துல குடிச்சு மரணமடைந்தால் பத்து லட்ச ரூபாய், வெள்ளத்துல இருந்தா 2 லட்சம் ரூபாய், என்னடா ஆச்சு அதை காட்டிலும் இவன் மட்டும் இல்ல இந்த கள்ள சாராயம் காய்ச்சினான் பாருங்க அவனுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறாங்கள்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் பத்து பாலம் கட்டிருக்கிறோம். மதுரையில் பறக்கும் பாலம், காளவாசல், ஒபுளா படித்துறை, குருவிக்காரன் சாலை பாலம், 7.30 கிலோமீட்டர் பறக்கும் பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கினது. 1296 கோடியில வீட்டிலேயே தண்ணீர் புடிச்சுக்கலாம் சாக்கடை வராது மூன்று நாளைக்கு ஒரு நாள் தண்ணீர் இல்லை 24 மணி நேரம் இரவு பகல் எந்த நேரம் பிடித்துக் கொள்ளலாம் அருமையான திட்டத்தை கொண்டு வந்தோம். நம்ம ஆட்சி மட்டும் தொடர்ந்திருந்தால் முடிஞ்சிருவோம்.ஒரு திட்டம் கூட உருப்படியான திட்டம் இல்லைங்க.நம்ம வீட்டுல வளர்க்க நாயி பூனைக்கு எல்லாம் வரி நாங்க போராட்டம் பண்ணி தான் அதை நிறுத்தினார்கள். மதுரை மாநகராட்சி இத தெரிஞ்சி தான் நாங்க போய் கண்டிச்சு எங்க மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசி ஒன்னும் ஆகல. நான் மனுவாக எழுதிக் கொண்டு போய் மாநகராட்சி ஆணையத்தின் கொடுத்தோம். அதன் பிறகு முதல்வர் தலையிட்டு மண்டல தலைவர்களை ராஜினாமா செய்ய சொல்லி உத்தரவிட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

"நம்ம ஊர் சூப்பர்" திட்டத்திற்கு

# பொதுமக்கள் ஒத்துழைப்பு தர ஒட்டன்சத்திரம் ஆணையாளர் வேண்டுகோள்

**ஒட்டன்சத்திரம், ஜூலை 21-**

வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசின் நம்ம ஊரு சூப்பர் என்ற பிரச்சார இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் மூலம் சமுகத்தினர் இடையே பாதுகாப்பான சுகாதாரம், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை நடைமுறைகள் பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

நம்ம ஊர் சூப்பர் திட்டத்தினை வலுப்படுத்தும் வகையில் ஒட்டன்சத்திரம் நகராட்சிப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சுற்றுச்சூழல், நிலத்தடி நீர் பாதுகாப்பு போன்றவற்றின் அவசியம் கருதி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினை உடனடியாக தவிர்க்க அரசின் உத்திரவின் பேரில், நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பயன்படுத்ததல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

பிளஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதால் கேன்சர் போன்ற கொடிய நோய்களும், மண்களின் உயிர்வேதியல் தன்மை பாதிக்கின்றது. இது குப்பையாகி மக்கி மண்ணாவதற்கு 500 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. மழைநீர் நேரடியாக பூமிக்கு செல்லாமல் நிலத்தடி நீர் மட்டத்தை பாதிக்கிறது. பசு ஆடு உள்ளிட்ட கால்நடைகள் பிளாஸ்டிக்கை உட்கொள்வதால் உணவு குழாய் அடைத்து மரணிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே இதற்கு மாற்றாக துணிபை, வாழை இலை, தாமரை இலை, பாக்குமர இலை, பேப்பர் ரோல், கண்ணாடி உலோக டம்ளர்கள், துணிபேப்பர், சணல்பைகள், பேப்பர் துணி கொடிகள் ஆகியவற்றை பயன்படுத்தலாம். நெகிழியை தடை செய்யும் பொருட்டு மேற்கண்ட மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவதோடு தமிழக அரசின் மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் துணிப்பைகளை பயன்படுத்துவது பழக்கமாக மாற்ற வேண்டுமென நகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது குறித்து ஆணையாளர் மு. ஸ்வேதா கூறியதாவது, நகர் பகுதியில் உள்ள 1 முதல் 18 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சேகாரம் ஆகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்து நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் சதன் நிறுவன ஒப்பந்த பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். எனவே நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், வணிக நிறுவனங்கள் தாங்கள் குப்பைகளை தரம் பிரித்து கொடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கூறினார்.




**வி.எஸ். மருத்துவ அறக்கட்டளை சார்பில் வி.எஸ். சர்வதேச துல்லிய புற்றுநோயியல் உச்சி மாநாடு (VIPOS 2025) சென்னையில் உள்ள கிரீன் பார்க் ஹோட்டலில் நடைபெற்றது. ஜூலை 18 முதல் 20 வரை நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இந்தியா முழுவதிலுமிருந்து 500-க்கும் மேற்பட்ட புற்றுநோய் மருத்துவ, அறுவை சிகிச்சை மற்றும் கதிர்வீச்சு புற்றுநோயியல் நிபுணர்கள்,மருத்துவர்கள்,நோயியல்நிபுணர்கள்,மரபியல்வல்லுநர்கள்,ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முதுகலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**



மதுரை மாநகர் மாவட்ட மத்திய 2-ம் பகுதி 58 வது வடக்கு வட்ட அ.தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் மணிகண்டன் தலைமையில் பகுதி பொறுப்பாளர் அஸ்வின் குமார் முன்னிலையில் மேலபொன்னகரம் ஆறாவது தெருவில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா,பா. குமார், சக்தி மோகன், எம்.எஸ்.கே.மல்லன்,சக்தி விநாயகர் பாண்டியன், ஆர்.கே. ரமேஷ், பேராசிரியர் ஜெயபால், ஓட்டுரணி திருமுருகன், வி.பி. ஆர். செல்வகுமார்,மார்கெட் செந்தில்குமார், தளபதி மாரியப்பன், எம்.ஏ.நாசர், திடீர் நகர் பாலா, கார்னர் பாஸ்கரன், எம்.ஏ.பாண்டி, பாண்டியம்மாள், கணேஷ்பாபு, கணேசன், பாரதிராஜா, வக்கீல் ஜெயபாண்டி, சண்முகநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# எமனேஸ்வரம் மாமாங்க தெப்பக்குளத்தை தூர்வார பொதுமக்கள் கோரிக்கை

## முருகேசன் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு

**பரமக்குடி, ஜூலை 21-**

பரமக்குடி சட்டமன்ற தொகுதி, நகராட்சிக்குட்பட்ட எமனேஸ்வரத்தில் உள்ள எமனேஸ்வரமுடையார் கோவில் மாமாங்க தெப்பக்குளத்தை தூர்வார பணியை துவக்க ஆய்வு செய்யப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம்,பரமக்குடி வைகை ஆற்றின் மறுகரையில் அமைந்துள்ளது எமனேஸ்வரமுடையவர் கோயில்.இக்கோயிலில் எமன், ஈஸ்வரனை பூஜித்து சாப விமோசனம் பெற்றதாக தலபுராணத்தில் கூறப்படுகிறது . இந்த தெப்பக்குளம் பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் கழிவுநீர் தேங்கி குப்பை கொட்டும் இடமாக மாறி உள்ளது. இந்நிலையில் இதனை சரி செய்ய அப்பகுதி மக்கள் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசனிடம் கோரிக்கை வைத்தனர்.

கோரிக்கையை ஏற்று பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி அதிகாரிகளுடன் மாமாங்க தெப்பக்குளத்தை நேரில் சென்று பார்வையிட்டு பணி தொடங்குவதற்கான ஆய்வுகளை செய்தார். ஆய்வின்போது நகராட்சி இளநிலை பொறியாளர் சுரேஷ், நகர்மன்ற உறுப்பினர்கள் தேவகிட்டு, ஜீவரத்தினம், பாக்கியராஜ், குபேந்திரன், தெற்கு நகர் இளைஞர் அணி அமைப்பாளர் துரைமுருகன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவாதவூரில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியை துவக்கி வைத்தார் அமைச்சர்



**மேலூர், ஜூலை 21-**

மதுரை மாவட்டம், மேலூர் அருகே திருவாதவூர் கிராமத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி திருவாதவூரில் நடைபெற்றது. மதுரை வடக்கு மாவட்ட கழச்செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி வடமஞ்சுவிரட்டு போட்டியை தொடங்கி வைத்தார்.

இந்த போட்டியில் 15 அணியை சேர்ந்த மாடுபிடி அணி வீரர்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் சிவகங்கை, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தம் 15 காளைகள் கலந்து கொண்டன. போட்டியில் வெற்றி பெற்ற காளையின் உரிமையாளர்களுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் ரொக்க பரிசு தொகையும், வெள்ளிகாசு, சில்வர் அண்டா, குத்து விளக்கு, கட்டில், தென்னங்கன்று போன்ற பரிசுகளை விழா குழுவினர் வழங்கினர்.

இந்த போட்டியை காண சுற்றுப்புற கிராமங்களான வேப்படப்பு, ஆமூர், கொட்டகுடி, பனங்காடி, பூஞ்சுத்தி, இடையபட்டி, தமராக்கி, பூவந்தி, ஒத்தகடை , மேலூர் உள்ளிட்ட சுற்றுப்பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள், மஞ்சுவிரட்டு ரசிகர்கள், வட மஞ்சுவிரட்டு போட்டியை கண்டு களித்தனர். வட மஞ்சுவிரட்டு போட்டியை திருவாதவூர் திரௌபதி அம்மன்குழு மற்றும் திருவாதவூர் இளைஞர்கள் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# பேங்க் ஆஃப் இந்தியா 56வது தேசியமயமாக்கல் தினத்தில் கிசான் திவாஸ் கொண்டாடுகிறது

**சென்னை, ஜூலை 21-**

பேங்க் ஆஃப் இந்தியா அதன் 56வது தேசியமயமாக்கல் தினத்தில், இந்தியாவின் விவசாயிகள், வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்முனைவோர் மற்றும் சுய உதவிக்குழுக்கள் (SHGs) ஆகியோரை மேம்படுத்துவதற்கான அதன் வலுவான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், பேங்க் ஆஃப் இந்தியா சென்னை மண்டலம் இந்த நாளை 'கிசான் திவாஸ்' என்று பெருமையுடன் கொண்டாடியது. இந்த தேசிய கொண்டாட்டத்திற்கு இணங்க, இந்திய வங்கியின் சென்னை மண்டலம் விவசாய சமூகத்திற்கான தொடர்பு, அங்கீகாரம் மற்றும் ஆதரவை மையமாகக் கொண்ட தொடர்ச்சியான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை நடத்தியது.

சென்னை மண்டலத்தின் கீழ் உள்ள 80 கிளைகளும் வாடிக்கையாளர் தொடர்பு திட்டங்களில் தீவிரமாக பங்கேற்றன, இதன் போது விசுவாசமான மற்றும் தொடர்ந்து திருப்பிச் செலுத்தும் வாடிக்கையாளர்கள் பாராட்டப்பட்டனர். இந்த நிகழ்வுகள் பல கிளைகளில் முக்கிய சிறப்பம்சங்களைக் குறிக்கும் முக்கிய கடன் வழங்கல்களுடன், இந்திய வங்கியின் விரிவான விவசாய மற்றும் கிராமப்புற வங்கி தயாரிப்புகளை எடுத்துக்காட்டுகின்றன.

சென்னையில் நடந்த மைய நிகழ்ச்சியில், பேங்க் ஆஃப் இந்தியா வின் தலைமை அலுவலகத்தின் பொது மேலாளர் (ஐடி) ஸ்ரீ சத்யேந்திர சிங் தலைமை விருந்தினர். இந்திய வங்கியின் பிற மூத்த மூத்த அதிகாரிகளான, சென்னை FGMO பொது மேலாளர் திருமதி அனிதா மொஹந்தி, சென்னை மண்டல மண்டல மேலாளர் திரு மோகன் மாரேதி, சென்னை மண்டல துணை மண்டல மேலாளர் திரு மேகநாதன் எஸ், இந்திய வங்கியின் பிற மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

சென்னை மண்டலத்தின் 10 மாவட்டங்களில் இருந்து 250க்கும் மேற்பட்ட விவசாயம் சார்ந்த வாடிக்கையாளர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். வங்கியுடன் நீண்ட கால உறவையும் சிறந்த திருப்பிச் செலுத்தும் சாதனைப் பதிவையும் கொண்ட வாடிக்கையாளர்கள் தங்கள் அர்ப்பணிப்பு மற்றும் நம்பிக்கைக்காக கௌரவிக்கப்பட்டனர்.

கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தகுதியான பயனாளிகளுக்கு கடன் ஒப்புதல் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டன. பிரமுகர்கள் வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, நவீன, நிலையான விவசாய நடைமுறைகளை பின்பற்ற ஊக்குவித்தார்கள். சுய உதவிக்குழு பெண் தொழில்முனைவோருக்கு தங்கள் வணிகங்களை விரிவுபடுத்துவது மற்றும் அவர்களை அடையாளம் காணக்கூடிய பிராண்டுகளாக மாற்றுவது குறித்து சிறப்பு வழிகாட்டுதல் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊடாடும் அறிவுப் பகிர்வு அமர்வுகள், வங்கியின் வேளாண் நிதி தீர்வுகள், அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் ஆதரவு சேவைகள் குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வை மேம்படுத்துதல் ஆகியவை இடம்பெற்றன. பேங்க் ஆஃப் இந்தியா உள்ளடக்கிய மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான ஒரு மூலக்கல்லாக உள்ளது. இந்தியாவின் விவசாய முதுகெலும்பை அர்ப்பணிப்பு, நம்பிக்கை மற்றும் வாடிக்கையாளர்-முன்னுரிமை அணுகுமுறையுடன் பெருமையுடன் ஆதரிக்கிறது.



மதுரையில் சௌராட்டிர சமூக அரசியல் பிரதிநிதித்துவ ஆலோசனை மற்றும் தீர்மான கூட்டம் ஓய்வுபெற்ற டிஜிபி கே.ஆர்.எம்.கிஷோர்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் அரசியல் கட்சிகளுக்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டு, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரியில் வேலைவாய்ப்பு கருத்தரங்கம்




**திண்டுக்கல், ஜூலை 21-**

திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரியின் வணிகவியல் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மையம், ஆயுள் காப்பீட்டு துறையில் வேலை வாய்ப்புகள் என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கை லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, திண்டுக்கல் மண்டலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நடத்தியது.

இந்நிகழ்விற்கு தொடக்கமாக கல்லூரியின் இணைப் பேராசிரியர் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எம். முருகானந்தம் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். சரவணன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக எல்.ஐ.சி. திண்டுக்கல் கிளையின் தலைமை ஆலோசகர் கே. மணிகண்டன் மற்றும் கிளை மேலாளர் என். முத்துக்குமார் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். அவர்கள் துறை சார்ந்த பல்வேறு அம்சங்களை மாணவர்களுக்கு விளக்கி, உயிர் காப்பீட்டு துறையின் தொழில்முனைவுத் தன்மையை, எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளை ஆழமாக எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் பொருளாதாரத் துறை தலைவர் டாக்டர் பி. ரவிச்சந்திரன், பேராசிரியர்கள் டாக்டர் எஸ். ஸ்ரிகலா, டாக்டர் எஸ். சீனிவாசன் மற்றும் டாக்டர் பி. ராணி சந்திரிகா ஆகியோரும் கலந்து கொண்டனர். வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் மற்றும் துறை தலைவர் (பொறுப்பு) டாக்டர். ஆர். பாலசுப்ரமணி, நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்து, ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இக்கருதரங்கு மாணவர்களுக்கு ஆயுள் காப்பீட்டு துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்த புதிய பார்வையை அளித்து, இளைஞர்களிடையே நிதி விழிப்புணர்வை வலியுறுத்தும் ஒரு அரிய வாய்ப்பாக அமைந்தது.

# குறுகிய அரசியல் லாபத்துக்காக மக்கள் நலனில் சமரசம்: மதுரை எம்.பி சாடல்

**மதுரை, ஜூலை 21-**

சிலரின் குறுகிய அரசியல் லாப நோக்கத்துக்காக மக்களின் நலன் சமரசம் செய்யப்படுகிறது என்று மதுரை மாநகராட்சி விவகாரத்தில் சு. வெங்கடேசன் எம்.பி. குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: மத்திய வீட்டுவசதி நகர்ப்புற விவகாரத் துறை அமைச்சகம், நாட்டின் தூய்மையான நகரங்களின் பட்டியலை வெளியிட்டது. நாடு முழுவதும் 10 லட்சத்துக்கும் மேல் மக்கள் தொகையுடைய 40 நகரங்களின் பட்டியலில் மதுரை 40-வதாக கடைசி இடத்தில் உள்ளது.

மாநில அளவிலும் 651 நகர்ப்புற உள்ளாட்சிகளில் மதுரை 543-வது இடத்தில் உள்ளது. இதன்மூலம் மதுரை நகரத்தின் தூய்மை மோசமாக உள்ளதை அறியலாம். மதுரை மாநகராட்சியில் 4 ஆண்டுகளில் 6 ஆணையர்கள் மாற்றப்பட்டுள்ளனர். சிலரின் குறுகிய அரசியல் லாப நோக்கத்துக்காக மக்களின் நலன் தொடர்ந்து சமரசம் செய்யப்பட்டு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு கோவில் தக்காராக கருமுத்து கண்ணன் இருந்த போது, நாட்டிலேயே சிறந்த முறையில் தூய்மையாக பராமரிக்கப்படும் கோயிலாக மீனாட்சி அம்மன் கோவில் தேர்வானது.

அதிக திருவிழா நடக்கும் கோவிலை, நாட்டிலேயே தூய்மையான கோவிலாக மாற்றி காட்டினார். பல லட்சம் பேர் வரும் கோவிலை தூய்மையாக நிர்வகித்த போது, மதுரை நகரை தூய்மையாக நிர்வகிப்பது கடினமல்ல. இப்புள்ளி விவரம் வெளிவந்த பிறகாவது மதுரை மாநகராட்சி விழிப்போடு செயல்பட வேண்டும்.

மாநில நகராட்சித் துறை அமைச்சர் முன்னிலையில் மதுரையை சேர்ந்த அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கும் மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தை கூட்டி விவாதிக்க வேண்டும். தனியார் நிறுவனத்தின் செயல்திறன், தூய்மைப் பணியாளர் நிலை, விழிப்புணர்வு என சிறப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும். மதுரை நகரத்தின் தூய்மையைப் பேணி காக்க தமிழக முதல்வர் தலையிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோவை புரோசோன் மால் 8-வது ஆண்டு விழா கொண்டாட்டம்

**கோவை, ஜூலை 21-**

கோவையின் பிரமாண்ட ஷாப்பிங் மற்றும் பொழுது போக்கு மையமான புரோசோன் மால், தனது 8-வது ஆண்டு நிறைவை சிறப்பாகக் கொண்டாடுகிறது. கடந்த எட்டு ஆண்டுகளாக கோவை மக்களுக்கு தனித்துவமான ஷாப்பிங் அனுபவங்களை வழங்கி வரும் புரோசோன் மாலை பெருமைப்படுத்தும் வகையில், சமூக வலைதளங்களில் புரோசோன்டியூனிக்8 என்ற ஹேஷ்டேக் மக்கள் ட்ரெண்ட்டாகி வருகின்றனர். இந்த ஆண்டு விழாவை முன்னிட்டு, மாலில் உள்ள 100-க்கும் மேற்பட்ட கடைகளில் விற்பனையாகும் பிரபல பிராண்டுகளுக்கு 70 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்களை கவரும் வகையில், புரோசோன் மாலில் விளையாட்டு மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இங்கு விளையாட்டு பொழுதைக் கழிக்க எந்தவித கட்டணமும் பெறப்படுவதில்லை. மேலும், முற்றிலும் இலவசமாக இந்தச் சேவையை புரோசோன் மால் வழங்கி வருகிறது. இங்கு விளையாட்டுகளில் பங்கேற்பவர்களுக்கு ரூ.2 லட்சம் வரை பரிசுகள் வழங்கப்பட உள்ளன. மேலும், ஸ்கிராட்ச் கார்டுகள் மூலமாக உடனடி பரிசுகளை வெல்லவும் வாடிக்கையாளர்கள் வாய்ப்பைப் பெறுகின்றனர்.இந்த மாலில் முதல் முறையாக, 360° இம்மர்சிவ் டோம் தியேட்டர் எனும் புதுமையான தொழில்நுட்பத் தியேட்டர் அறிமுகமாகியுள்ளது. ஜூலை 19 முதல் ஆகஸ்ட் 18 வரை இந்த தியேட்டர் வாடிக்கையாளர்களாகத் திறந்து இருக்கும்.தங்களின் நேரத்தை மிகவும் பயனுள்ள வகையில் செலவு செய்ய மகிழ்ச்சியின் மையமான புரோசோன் மாலுக்கு வாருங்கள் சிறந்த ஷாப்பிங் அனுபவத்தைப் பெறுங்கள்.

# திருமங்கலம் பகுதியில் சிறு வணிகர்களால் நிராகரிக்கப்படும் ஜி பே-போன் பே சேவை

## பொதுமக்கள் அவதி

**திருமங்கலம், ஜூலை 21-**

திருமங்கலம் பகுதி கிராமங்களிலுள்ள சிறு வணிகர்கள் பண பரிவர்த்தனை சிக்கல்களை காரணம் காட்டி ஜி பே-போன் பே உள்ளிட்ட யு.பி.ஐ. சேவைகள் முடக்கப்படுவதால் பொது மக்கள் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தியாவில் சிறிய கிராமங்கள் முதல் பெரிய நகரங்கள் வரை அனைத்து இடங்களிலும் டிஜிட்டல் பரிவர்த்தனை அதிகரித்து கூகுள் பே, போன்பே, பேடிஎம் போன்ற யு.பி.ஐ. செயலிகளை மக்கள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.இதன்படி ஒருவருக்கொருவர் பணம் பரிமாற்றம் செய்வது, கடைகளுக்குச் சென்று வாங்கும் சிறிய ரக பொருட்களுக்கும் ஸ்கேன் செய்து பணம் வழங்கும்




முறை தற்போது அதிகரித்து வருகிறது. ஆனால் குக்கிராமங்கள் அதிகம் நிறைந்த பகுதியில் யு.பி.ஐ. சேவைக்கு சோதனை வந்துள்ளது.

குறிப்பாக திருமங்கலம் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சிறு வணிகர்கள், உணவகங்கள், டீக்கடைக்காரர்கள் தங்களுடைய கடைகளில் இனிமேல் யு.பி.ஐ. பேமெண்ட் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம் எனவும், பணம் கொடுக்கவும் என விளம்பர அட்டைகள் வைத்துள்ளனர். இருக்கிறார்கள். மேலும் பல கடைக்காரர்கள் தங்கள் கடைகளில் ஒட்டி இருந்த கியூ ஆர் கோடு ஸ்டிக்கர்களை அதிரடியாக நீக்கி விட்டனர். இது வெளியூர் களிலிருந்து திருமங்கலம் பகுதி கிராமங்களுக்கு செல்போனும் கையுமாக வருகை தருவோருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாக திருமங்கலம் கிராமப் பகுதிகளில் சாலையோர கடை நடத்துபவர்கள், டீக்கடை நடத்துபவர்கள், தள்ளுவண்டி வைத்திருப்பவர்கள் என பெரும்பாலானோர் தங்களது வணிக பரிவர்த்தனை யு.பி.ஐ. மூலம் வங்கிகளில் முடங்கி விடுவதாகவும், தங்களது பணத்தை எடுத்திட வங்கி மற்றும் ஏ.டி.எம்.களில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாகவும் கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும் சேவை சார்ந்த சிறு தொழிலில் ஈடுபடுபவர்களின் தினசரி வருமானம் 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும்போது கட்டாயம் ஜஎஸ்டியில் பதிவு செய்து வரி செலுத்தியாக வேண்டும் என்று கூறப்படுகிறது.யு.பி.ஐ. சேவை நிறுவனங்களிடம் வணிகர்களின் யு.பி.ஐ. பண பரிவர்த்தனை விவரங்களைப் பெற்று அதன் மூலம் ஜிஎஸ்டி பிரச்சனை தங்களுக்கு ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவும் யு.பி.ஐ. பரிவர்த்தனை வேண்டாம் என திருமங்கலம் பகுதி கிராமப்புற சிறு வணிகர்கள் மறுப்பது பொது மக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 /94**

## பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரரான திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுகா, கொடைக்கானல் டவுன், அண்ணாசாலை, பங்கஜம் ஹவுஸ், கதவு எண்.25/51Cல் இருந்து வரும் ஈஸ்டர்ன் ரிலேட்டர்ஸ் உரிமையாளரான லேட். V.N.A.சுப்பிரமணியம் அவர்களது குமாரர் சுமார் 83 வயதுள்ள திரு. V.N.A.S. சந்திரன் அவர்களுக்காக அவரது முறையான தகவலின் படி கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில், மேற்படி எமது கட்சிக்காரரின் ஈஸ்டர்ன் ரிலேட்டர்ஸ்-க்கு பாத்தியப்பட்ட 50 செண்ட் நிலம் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுகா, கொடைக்கானல் டவுன், பழைய சர்வே எண்.231-க்கு ரீ சர்வே வார்டுB, பிளாக் எண்.39, T.S.No.2/29 மற்றும் T.S.No.2/30 -ல் உள்ளது. மேற்படி சொத்தை பொறுத்து எமது கட்சிக்காரர் கடந்த 21.11.1987-ம் தேதியில் திருமதி.ராஜேஸ்வரி வகையாறாக்களின் பொது அதிகார முகவரான திரு.மணிமொழியன் அவர்களிடமிருந்து கொடைக்கானல் சார் பதிவாளர் அலுவலக கிரைய ஆவணம் எண்கள். 34/1987 மற்றும் 37/1987-ன் மூலமாக கிரையம் பெற்ற அசல் கிரைய ஆவணங்கள் மற்றும் மேற்படி சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை எமது கட்சிக்காரர் கடந்த 20.06.2025ம் தேதியில் கொடைக்கானல் டவுன் அண்ணா சாலையில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுப்பதற்காக எடுத்து சென்ற பொழுது மேற்படி அசல் கிரைய ஆவணங்கள் மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதிர்பாராத விதமாக தொலைந்து விட்டது. மேற்படி தொலைந்த ஆவணங்கள் யாருக்கேனும் கிடைக்கப் பெற்றால் அதனை மேற்படி விலாசத்தில் உள்ள எமது கட்சிக்காரர் வசமோ அல்லது கீழ் காணும் எமது அலுவலக முகவரியிலோ பத்து தினங்களுக்குள் ஒப்படைக்கவும். மேற்படி தொலைந்த அசல் ஆவணங்களை வைத்து மேற்படி சொத்தை பொறுத்து யாரேனும் ஏதேனும் வில்லங்கம் ஏற்படுத்த முயற்சித்தால் அது எமது கட்சிக்காரரையோ, மேற்படி சொத்தையோ எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று இதன் மூலம் சகலருக்கும் பொது அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

**A.MOHAMED MYDEEN** B.Com.B.L.,
**C.RAGAVENDRAN** B.A.B.L.,
ADVOCATES, NO.7. HAJIYARS COMPLEX,
ANNASALAI, KODAIKANAL. 624101

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம் பரமக்குடி**
**ந.க.பி 6 /4923/2025**
சேகர்
த/பெ ராமதாஸ்
சரவணம்பட்டி கோயம்புத்தூர்
----மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை வழிப்பாட்டி எருமைக்கரசி என்பவர் கடந்த 01.11.1984 அன்று முதுகுளத்தூர் வட்டம், புளியங்குடி கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை வழிப்பாட்டி இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டனர். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 08.08.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
சேகர்
மனுதாரர்

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம் பரமக்குடி**
**ந.க.பி 6 /4397/2025**
செங்கோல்மேரி
த/பெ அருளானந்து
கருப்பாயூரணி மதுரை
----மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை அருளானந்து என்பவர் கடந்த 25.12.1988 அன்று பரமக்குடி வட்டம், வெங்கிட்டான் குறிச்சி கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டனர். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 18.08.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
செங்கோல்மேரி
மனுதாரர்

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம் பரமக்குடி**
**ந.க.பி 6 /4189/2025**
நாகலிங்கம்
த/பெ இருளாண்டித்தேவர்
மாரந்தை கடலாடி வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
----மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை இருளாண்டித்தேவர் என்பவர் கடந்த 10.11.2008 அன்று கடலாடி வட்டம், மாரந்தை கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டனர். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 08.08.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சிய பணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
நாகலிங்கம்
மனுதாரர்

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம் பரமக்குடி**
**ந.க.பி 6 /4398/2025**
செங்கோல்மேரி
த/பெ அருளானந்து
கருப்பாயூரணி, மதுரை
----மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தாயார் அருளாயி என்பவர் கடந்த 18.07.1988 அன்று பரமக்குடி வட்டம், வெங்கிட்டான் குறிச்சி கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய தாயார் இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டனர். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 18.08.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
செங்கோல்மேரி
மனுதாரர்

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் / சார் ஆட்சியர் அலுவலகம் பரமக்குடி**
**ந.க.பி 6 /4188/2025**
நாகலிங்கம்
த/பெ இருளாண்டித்தேவர்
மாரந்தை கடலாடி வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்
----மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தாயார் தவசியம்மாள் என்பவர் கடந்த 17.06.2014 அன்று கடலாடி வட்டம், மாரந்தை கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தாயார் இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டனர்.மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 08.08.2025 ஆம் தேதி அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சியபணை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
நாகலிங்கம்
மனுதாரர்

